செ.வெ.எண்:-36/2020 நாள்:28.03.2020

திண்டுக்கல் மாவட்டம்

# திண்டுக்கல் மாவட்டத்தில் 29.03.2020 ஞாயிற்றுக்கிழமை முதல் காய்கறி அங்காடி மற்றும் பெட்ரோல் பங்குகள் காலை 6.00 மணி முதல் மதியம் 2.30 மணி வரை மட்டுமே செயல்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மொத்த காய்கறி, பழ அங்காடிகளுக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள், மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிக்குள் பொருட்களை இறக்கி விட வேண்டும்.

- ❖ காய்கறி அங்காடி மற்றும் பிற காய்கறி விற்பனை கடைகள், அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் கடைகள், காலை 6 மணி முதல் மதியம் 2.30 மணி வரை மட்டுமே திறந்திருக்க வேண்டும்.

- ❖ மருந்தகங்கள், உணவகங்கள் (பார்சல் மட்டும்) நாள் முழுவதும் எப்போதும் போல் இயங்கும்.

- ❖ பெட்ரோல் பங்குகள் காலை 6 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மட்டுமே செயல்படும். எனினும், அரசு வாகனங்கள், 108 அவசர ஊர்திகள் போன்ற ஊர்திகளுக்கான பிரத்யேக பெட்ரோல் பங்குகள் மட்டும் நாள் முழுவதும் தொடர்ந்து செயல்படும்.

- ❖ வயது முதிர்ந்தோர் வீட்டில் சமைக்க முடியாதோர் போன்றோர், சமைத்த உணவு பொருட்களை வீட்டிற்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்கின்றனர். இத்தகையோரின் நலன் கருதி "Swiggy, Zomato, Uber eats" போன்ற நிறுவனங்களின் மூலம், காலை 7 மணி முதல் 9.30 மணி வரை காலை சிற்றுண்டியும், மதியம் 12 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மதிய உணவும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இரவு உணவும் எடுத்துச்சென்று வழங்க சிறப்பினமாக அனுமதிக்கப்படுகிறது.

- ❖ 15.02.2020-க்குப் பிறகு வெளிநாடு சென்று திரும்பியவர்கள் மற்றும் அவர்களோடு தொடர்பில் இருந்த நபர்கள், தங்களைத் தாங்களே கட்டாயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனிமைப்படுத்தி உள்ளவர்களுக்கு தகுந்த ஆலோசனை வழங்க ஆலோசகர்கள்(Counselors) நியமிக்கப்பட்டுள்ளனர்.

- ❖ தனிமைப்படுத்தி உள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் உதவிகள் தேவைப்பட்டால் உடனடியாக உதவி மையம் எண் 0451 2460320 மற்றும் Helpline 1077 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். உதவி மையத்தில் ஆலோசனை வழங்க 24 மணி நேரமும் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தீவிரமாக மேற்கொண்டு வரும் இத்தருணத்தில் பொதுமக்களும் இந்நோய்ப் பரவலின் தீவிரத்தை உணர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---